தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# ‘வண்டலூர் சிறு தெய்வ வழிபாட்டு முறை-(கள ஆய்வு)

**வி. அஞ்சுகப்பிரியா**

**தமிழிலக்கியம் மூன்றாமாண்டு (22UTA102)**

**ஏ. டி. எம் மகளிர் கல்லூரி( தன்னாட்சி)**

**நாகப்பட்டினம்**

ஆய்வு சுருக்கம்

மக்கள் தெய்வங்களுக்கு செய்யும் சடங்குகளும் வழிபாட்டு நெறிகளும் வழிபாட்டு முறை எனப்படும். சிறு தெய்வ வழிபாடுகளில் தெய்வங்களை அலங்கரித்தல், பூசை செய்தல், படையல் போடுதல் , நேர்த்திக்கடன் செலுத்துதல், ஆடியும் பாடியும் துதித்தல் போன்றவை வழிபாட்டு முறைகளாக அமைகின்றன.

முன்னுரை

சிறு தெய்வ வழிபாடு என்பது நாட்டார் தெய்வங்களை வழிபடும் முறையாகும். சிறு தெய்வ வழிபாட்டில் வீட்டு தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, இன தெய்வ வழிபாடு, ஊர் தெய்வ வழிபாடு என பல வகைகள் காணப்படுகின்றன. இந்த தெய்வ வழிபாட்டு முறையில் பொதுவான இலக்கணங்களோ வரைமுறைகளோ வகுக்கப்படவில்லை. அவை காலம் காலமாக முன்னோர்களால் செய்யப்படுகின்றன. இந்த தெய்வங்களின் வழிபாடானது நாட்டார் மக்கள் மக்களின் நம்பிக்கை அடிப்படையிலும் முன்னோர் கற்றுத் தந்த முறைப்படியும் நடக்கிறது.

சிறு தெய்வ வழிபாட்டில் வழிபடும் தெய்வங்கள்

மாரியம்மன், காளியம்மன், முத்தாலம்மன், கோனியம்மன், ஏழு கன்னிமார், முத்துலட்சுமி, அங்காள தேவி, பகவதி அம்மன் போன்ற பெண் தெய்வங்கள் சிறு தெய்வ வழிபாட்டு முறையில் இருக்கின்றது.

வழிபாட்டின் தொடக்கம்

பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், விண்மீன்கள், மலைகள், நதிகள் மழை இடி மின்னல் வறண்ட பருவங்கள் சூறைக்காற்று முதலிய இயற்கையில் உள்ள புதுமைகளை மறுக்கவோ மாற்றவோ முடியாது.

காடுகளை அழித்து உழுது பயிர் செய்து பலனடைய நினைக்கும் பலம் அற்ற மனிதன் தன்னை சூழ்ந்துள்ள சூழ்ந்துள்ள அளவிட முடியாத சக்திகளால் தனக்கும் தனது பயிர்களுக்கும் தீங்கு ஏற்படுமாறு பயந்தான். இவ்வாறு பயமடைந்த தன் மனதை திடமடைய செய்யவும், தனக்கு தீங்கிழைக்காதிருக்க உதவி செய்யுமாறு துதி பாடினான். இதுவே, மனிதன் தனக்கு புறம்பாக உள்ள சக்திகளை பற்றி நினைக்க துதிக்க ஆரம்பித்த வரலாறு என சரித்திரம் கூறுகிறது. என வழிபாட்டின் வரலாற்றை நினைவு கூறுகிறார் அன்னக் காமு. பாம்பால் பயம் கொண்ட மக்கள் அப்பாம்பினை வழிபட்டு தங்கள் பயத்தை குறைத்துக் கொள்கின்றனர். பாம்புக்கு பாலூட்டி பாடல்கள் சில பாடி வழிபடுகின்றனர்.

ஒரு பாடல்,

புற்று புற்று நாகரே

பூமியிடம் கொண்டவரே

. மணிப்பிரம்பு போலே

வால் அழகு நாகரே

எனவே தனது மனதை திடப்படுத்திக் கொள்ள வழிபாடும், நம்பிக்கைகளும் ஆரம்பித்தது இதுவே வழிபாட்டின் தொடக்கமாகும்.

வண்டலூர் அம்மன் கோவிலின் வழிபாட்டு முறைகள்

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், வண்டலூர் ஊராட்சியில் இருக்கின்றது இந்த மாரியம்மன். அம்மனுக்கு அபிஷேகம் செய்தும் வருடம் தோறும் அதாவது, ஒவ்வொரு வருடமும் ஆண்டிற்கு ஒரு முறை பங்குனி மாதம் திருவிழாவானது மிகச் சிறப்பாக நடைபெறும். மேலும், இந்த அம்மனின் சிறப்புகள் பற்றியும் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைகள் பற்றியும் காணிக்கைகளையும் சக்திகளையும் விரிவாக தெரிந்து கொள்ளலாம்.

அம்மனின் அமைப்பு

கருவறையில் ஒரே இடத்தில் காளியம்மனும் மாரியம்மனும் இரு அம்மனுக்கும் நடுவில் விநாயகர் அமர்ந்திருப்பார். வேறு எந்த கோவிலிலும் ஒரே இடத்தில் இரு அம்மன்கள் அமர்ந்திருப்பது காண முடியாதது. இது இங்கு சிறப்பாக சொல்லப்படுகிறது.

அம்மனுக்கு செய்யப்படும் சடங்கு முறைகள்

பால், தயிர், நெய் இளநீர் பன்னீர், எலுமிச்சை, சந்தனம், பஞ்சாமிர்தம் திருநீறு, குங்குமம், போன்ற பொருட்களை கொண்டும் அபிஷேகம் செய்யப்படுகின்றது. இவ்வாறு அபிஷேகம் செய்வதால் அம்மனுக்கு சக்திகள் பெருகுவதாக நம்பப்படுகிறது.

வேங்கை, இலவம், புன்குமரம் இவை பூக்களைச் சொரிந்து அழகுபடுத்தின".“மரவம், பாதிரி, புன்னை, குரவம், கோங்கம் இவை மலர்ந்தன; இவற்றின் கொம்புகளில் வண்டுகள் ஆர்த்தன; அவை யாழ்போல் ஒலி செய்தன" என்று பாடினர்.

அம்மனுக்கு செய்யப்படும் படையல்கள்

சைவ உணவுகளே அம்மனுக்கு படையலிடுகின்றன. கடலை எலுமிச்சை சாதம், புளி சாதம், தயிர் சாதம் போன்றவை அம்மனுக்கு படையல் இட்டு அன்னதானமாக மக்களுக்கு கொடுக்கின்றனர்.

அம்மனின் சிறப்பு

அம்மனை மனது நிறைவாக வேண்டி கோரிக்கை வைத்தால் நாம் வைத்த கோரிக்கை நிறைவேறும். அதே போல நமக்கு எந்த வித தீங்கும் வராமல் துணையாக நம்மை பாதுகாப்பாள்.

ஆனைத்தோல் போர்த்தி புலியின் உறி உடுத்து

கானத்த எருமைக் கருத்தலை மேல் நின்றாயால்

வானோர் வணங்க மலை மேல் மறையாகி

ஞானக் கொழுந்தாய் நடுக்கு இன்றியே நிற்பாய்

(சிலம்பு: பக்-179)

பேய் ஓட்டுதல்

பேய் என்பது நிறைவேறாத ஆசையுடன் இறந்து போனவர்களின் ஆன்மா இந்த ஆன்மா தன்னுடைய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் தன் பகைகளை தீர்த்துக் கொள்ளவும் மனிதர்களின் உடலில் புகுந்து கொள்கின்றது இந்த ஆன்மாக்கள் மனிதர்களின் உடலில் புகுவதால் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது

பேய்களுக்கு பிடித்தப்பொருட்கள்

பேய்கள் சில பொருட்களை மட்டுமே விரும்பும் இறைச்சி உணவுகள், சுருட்டு, பீடி, சாராயம், ரத்தம், முட்டை, இறைச்சி வகைகள் போன்ற பொருட்கள் பேய்களுக்கு பிடிக்கும் என்று மக்களிடையே நம்பப்படுகின்றது.

பேய் ஓட்டும் முறை

பூசாரியிடம் பேய் பிடித்தவரை அழைத்துச் சென்று ஓட்ட சொல்லுவார்கள். அப்போது அந்த பூசாரி பேய் பிடித்தவர் மீது திருநீறு தூவி ஒரு இடத்தில் அடக்கி வைப்பார். அதன்பின்பு பேய் இடம் யாரென்றும் பேயின் ஆசையையும் கேட்பார். தன்னுடைய ஆசைகளையும் தனக்குத் தேவையான உணவுப் பொருட்களையும ஆன்மா கேட்கும் அதனுடைய ஆசைகளை நிறைவேற்றுவார். அவ்வாறு நிறைவேற்றிய பின் அந்த ஆன்மா அந்த உடலை விட்டு

போகாவிட்டால் வேப்பிலை, சாட்டை போன்ற பொருட்களைக் கொண்டு அடித்து பேயினை ஓட்டுவார். பூசாரி பேயினை ஓட்டும் போது மந்திரம் கூறுவார் அவ்வாறு மந்திரம் கூறும்போது ஆன்மா புகுந்த நபர் தன்னுடைய தலையில் இருந்து அவராகவே முடியினை எடுத்துத் தந்து அதை பூசாரி அரச மரத்தில் ஆணி அடித்து வைப்பார் இதன் பின்பு அந்த ஆன்மாவானது மனிதனின் உடலை விட்டு சென்றுவிடும்.

கோவிலில் இருக்கக்கூடிய பிற தெய்வங்கள்

பார்ப்பதற்கு பயமுறுத்தும் வகையில் இருக்கக்கூடிய பெரியநாயகி இந்த அம்மன் காலில் மனிதனை மிதித்த படி கையில் குழந்தையுடன் அரிவாள் வைத்துக் கொண்டு நாக்கினை வெளியே நீட்டியபடி கருப்பு நிற உடையில் ஆக்ரோஷமாக இருக்கும். இந்த தெய்வம் குழந்தை பாதுகாப்பில் முக்கியமாக சொல்லப்படுகிறது.

அடுத்ததாக சிவப்பு நிற புடவை அணிந்து சிங்கத்தில் அமர்ந்திருக்கக் கூடிய காளியம்மன் இருக்கும். நாக்கினை வெளியே நீட்டியபடி பெரிய கண்கள் கொண்டு அரக்கனை சூலத்தால் கொள்வது போல காட்சி அளிக்கும்.

கையில் வாள் ஏந்தி மகிடனை அழித்துக் கலைமான் மீது நிற்கின்றாய். அரி, அரன், அயன் இம்மூவர் உள்ளத்தும் நிறைந்தவள். நீ சோதி விளக்காக அவர்கள் உள்ளத்தில் சுடர் விடுகின்றாய்".

"சங்கும் சக்கரமும் உன் திருக்கையில் தாங்கி நிற்கிறாய். சிங்க ஏற்றில் அமர்ந்து இருக்கின்றாய். கங்கையை முடியில் அணிந்த சிவனின் இடப்பாகத்து உறைகின்றாய். வேதங்கள் உன்னை ஏத்திப் புகழ்கின் "மற்றும் கொன்றையும் துளவமும் சேரத் தொடுத்த மலர்ப்பிணையலைத் தோள் மேல் இட்டு அசுரர் வாட அமரர் வாழக் குமரிக் கோலத்தில் மரக்கால் கூத்து ஆடிக்காட்டினாய்".

இரு மனைவிகளுடன் கையில் போர் கருவி மற்றும் அரிவாளும் கொண்டு காட்சியளிக்க கூடியது காத்தவராயன் சுவாமி.

கருப்பு நிற உடலமைப்புடன் பார்ப்பதற்கு உக்ரமாக இருக்கக்கூடிய கருப்பண்ண சுவாமி. அரிவாள் சாட்டை போன்ற கருவிகளை வைத்துக்கொண்டு தன்னுடைய மனைவியுடன் இங்கே காட்சியளிக்கின்றார்.

கோவிலை சுற்றி வலம் வரும்போது துர்க்கை கையில் சூலாயிதத்துடன் காட்சி அளிக்கிறாள்.

கோவிலில் சேர்ந்து இல்லாமல் தனியாக ஒரு குடிசை போன்ற ஒரு இடத்தில் தனியாக மண்டியிட்டவாறு அமர்ந்திருக்க கூடிய இருளன் சுவாமி. அவர் அருகில் ஆட்டுத்தலையானது இருக்கும் கையில் போர் கருவி மற்றும் அருவாள் போன்றவைக் கொண்டு பாதுகாக்கும் சுவாமியாக காட்சி அளிப்பார்.

அதனைத் தொடர்ந்து சுற்றிவரும் போது வேம்பு மரம் அருகில் நாகம் போன்ற சிலை அமைப்பு கொண்டு பெண் உடலமைப்புடன் நாகாத்தம்மன் காட்சி தருகிறாள்.

திருவிழா

ஆண்டு தோறும் பங்குனி மாதம் முதல் வாரம் திருவிழா நிகழ்வானது ஆரம்பமாகிறது. முதல் ஞாயிற்றுக்கிழமை அம்மனுக்கு வரிசை எடுத்து செல்வார்கள். இது திருவிழாவின் ஆரம்ப நிகழ்வாக நிகழ்வாக இருக்கின்றது. இதனை தொடர்ந்து அம்மனுக்காக விரதம் இருப்பவர்களுக்கு காப்பானது கட்டப்படுகின்றது. காப்பு கட்டியவர்கள் அசைவம் உண்ணக்கூடாது.

சக்தி கரகம்

காப்பு கட்டிய பின்பு தினமும் சக்தி கரகம் நிகழ்வானது நடைபெறும். இந்த சக்தி கரகம் நிகழ்வு தீ மிதி வரை நடைபெறும். கரகத்திற்கு மக்கள் தினமும் அர்ச்சனை செய்து வழிபடுகின்றனர். அம்மனே ஊரை சுற்றி வலம் வருவதாக நம்பப்படுகின்றது.

அம்மன் ஊர்வலம்

இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை மக்கள் பால்காவடி மற்றும் அழகு குத்தி தங்களுடைய காணிக்கைகளை செலுத்துகின்றன. அன்று எல்லைப்பிடாரி ஊரை சுற்றி அம்மன் கோவிலுக்கு செல்கின்றது. அதன் பின்பு அம்மனை அலங்கரித்து ஊர் முழுவதும் ஊர்வலமாக வருகின்றது. அம்மன் ஊர்வலத்திற்கு முன்னே அம்மனை பார்த்தபடியே காத்தவராயன் வருகின்றார். இந்த ஊர்வலமானது மிகவும் சிறப்பாக இருக்கும்.

தீமிதி திருவிழா

அம்மன் ஊர்வலத்தை தொடர்ந்து திங்கட்கிழமை இரவு தீமிதி திருவிழா நடைபெறும் தீமிதி அன்று எண்ணற்ற மக்கள் தீ மிதிப்பதற்கு ஆர்வமாகவும் பக்தியுடனும் தீக்குழியில் இறங்குவார்கள் தீக்குழி இறங்குவதற்கு முன்பு ஊரில் இருக்கக்கூடிய தீமிதிப்பதற்காக கங்கணம் கட்டிக் கொள்ளப்படுகிறது

. தீமிதி அன்று மட்டும் இரு கரகங்கள் ஊரில் வலம் வரும் இரு கரகங்களும் இரு அம்மனாக கருதப்படுகிறது. தீக்குழியில் முதலில் இரு அம்மனும் இறங்குகின்றது. அதில் காளியம்மன் மண்டியிட்டு தீயில் இறங்கும். அதன் பின்பு பக்தர்கள் ஆர்வமுடன் தீக் குழியில் இறங்குகிறார்கள். பக்தர்கள் தீக்குழியில் இறங்கி முடிக்கும் வரை அம்மனின் முகமானது மிகவும் ஆக்ரோஷமாகவும் கோபமாகவும் இருக்கும். பக்தர்கள் அனைவரும் இறங்கி முடித்த பின் அம்மனின் முகம் பொலிவுடன் மகிழ்ச்சியாக மாறுகின்றது. தீமிதி திருவிழாவிற்கு வெளியூரிலிருந்து கூட மக்கள் வருவது வழக்கமாக இருந்து வருகிறது. அந்த அளவிற்கு சக்தி வாய்ந்தது இந்த அம்மன்.

செடில் உற்சவம்

தீ மிதியினைத் தொடர்ந்து செவ்வாய்க்கிழமை செடில் உற்சவம் மற்றும் மாவிளக்கு போடும் நிகழ்வு நடைபெறும். மாவிளக்கு போடும்போது பக்தர்கள் தன்னுடைய

வயிற்றில் மாவிளக்கு போட்டால் உடல்நிலை சரியில்லாமல் உடலில் ஏதாவது பிரச்சனை இருந்தால் தீர்ந்துவிடும் என்று நம்பிக்கை இருந்து வருகிறது.

அதேபோன்று குழந்தை வரம் வேண்டுகின்றவர்கள், தம் பிராத்தனை நிறைவேறிய பின்னர் நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டு தங்கள் குழந்தைகளை செடில் உற்சவத்தில் பங்கேற்க வைக்கின்றனர். ஏற்றம் போல் அமைந்துள்ள செடிலில் குழந்தைகளை தாங்கிய படியானது பூசாரியால் சக்கரம் போல சுற்றப்படுவதே நேர்த்திக்கடனாக கருதப்படுகின்றது.

அக்னி கப்பரை

செடிலைத் தொடர்ந்து அக்கினி கப்பரை நிகழ்வானது நடைபெறுகிறது. கருப்பு நிற உடை அணிந்து துளசி மாலை போட்டு கையில் அக்கினியுடன் ஊரில் உள்ள அனைவருக்கும் திருஷ்டி கழிப்பதற்கு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று திருநீறு பூசி கருப்பு நிற பொட்டு வைத்து வீட்டில் உள்ள அனைவரையும் திருஷ்டி கழிப்பார். இதனால் குடும்ப உறுப்பினர் திருஷ்டி கழிவதாக சொல்லப்படுகிறது. இதே நாளன்று மாலை காப்பானது அவிழ்க்கப்படுகிறது. இது திருவிழாவின் இறுதி நிகழ்வாகும்.

முடிவுரை

சிறு தெய்வ வழிபாட்டில் ஒவ்வொரு வழிபாட்டு முறையும் வெவ்வேறு ஆகவும் முன்னோர்களின் ஆலோசனை படியும் பாரம்பரியாகவும் பாரம்பரிய முறை படியும் வழிபாடானது நடைபெறுகிறது ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு விதமாக சிறுதெய்வ வழிபாடானது இருக்கின்றது. வழிப்பாட்டு முறையில் மிகவும் பாரம்பரியமான முறையும் அதிக நம்பிக்கைகளும் கொண்டதே சிறுதெய்வ வழிபாட்டு முறையாகும்
என இக்களாய்வின் மூலம் தெரிந்து கொள்கின்றோம்.

துணைநூல் பட்டியல்


1. புலியூர்கேசிகன் ,சிலப்பதிகாரம், பாரிநிலையம். 184/88,பிராட்வே, சென்னை- 600108 முதற்பதிப்பு-1886

2. சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல், மணிவாசகர் பதிப்பகம், மேலசன்னதி, சிதம்பரம் முதற்பதிப்பு - 1990